**சுருக்கம்**

சென்னை பெருநகர அபிவிருத்தித் திட்டம் – சென்னை பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2009–2010ம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ.3.00 கோடியை ஆவடி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை**

அரசு ஆணை(நிலை) எண்: 42 நாள் 26.02. 2010

படிக்க:-

1. அரசு ஆணை (நிலை) எண்.62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.04.2008.
2. அரசு ஆணை (நிலை) எண்.105, நிதி, நாள் 13.03.2009.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.31164/ 09/ UGSS2, நாள் 29.09.2009.

------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆவடி நகராட்சியில் 158.05 கோடி செலவில் கீழ்க்கண்ட நிதி பகிர்வுடன் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| மைய அரசு மான்ய உதவி | : | ரூ. 63. 22 கோடி |
| வட்டியில்லா கடன் | : | ரூ. 15. 81 கோடி |
| நகராட்சி மற்றும் பொது மக்களது பங்களிப்பு | : | ரூ. 79. 02 கோடி |
| மொத்தம் | | ரூ. 158. 05 கோடி |

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆவடி நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் 8 பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்றும் அவற்றில் 4 பகுதிகளில் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும், மற்ற 4 பகுதிகளில் ஒருங்கிணைந்த ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டு உள்ளது என்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மதிப்பீட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது கடிதத்தில் இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக பொதுமக்கள்/ நகராட்சிகள் பங்களிப்புத் தொகையான ரூ.79.02 கோடியில் ரூ.0.01 கோடி மட்டுமே பெறப்பட்டுள்ளது என்றும் பல்வேறு குடிநீர் திட்ட பணிகளுக்காக நிதி பெறுவதில் சிரமங்கள் உள்ளதால் மேற்கூறியவாறு நகராட்சியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை என்றும் நகராட்சியின் நிதி பங்களிப்பு தொகைக்காக TUFIDCO–விலிருந்து கடன் பெறுவது என திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். தற்போது பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும்

கழிவுநீரகற்று வாரியம் இதற்கான நிதியினை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**4.** நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது கடிதத்தில் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மண்டலத்தில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக சென்னை மாநகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் **2009–2010** நிதி ஆண்டின் ஆண்டுத் திட்டத்தின் கீழ் ரூ.**3.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிதியை ஆவடி நகராட்சியின் நிதிநிலையை கருத்தில்கொண்டு அந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆவடி நகராட்சிக்கு மானியமாக வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** நகராட்சி நிர்வாக இயக்குநரது செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று சென்னை பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக ஆவடி நகராட்சிக்கு ரூ.3.00 கோடி மானியமாக வழங்கி ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

> "4215 Capital Outlay on water supply and sanitation – 02 Sewerage and sanitation 101 Urban Sanitation services – JD – CMDP – Share capital participation to CMA for sewerage facilities in Chennai Region – II State plan - 22. Investments DPC No.4215 02 -101 – JD – 2206".

7. மேலே பத்தி **6–**ல் வழங்கப்பட்ட தொகையை பெற்று ஆவடி நகராட்சிக்கு விடுவிக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**8.** இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.**5879**/ந.நி.(ம)கு.வ./**10**, நாள் **22.02.2010** இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–**600 005.**
நகராட்சி ஆணையர், ஆவடி நகராட்சி. (நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை–**5** வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–**600 005.**
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை– **600 108.**
மாநிலக் கணக்காயர், சென்னை– **600 005.**
மாநிலக் கணக்காயர், சென்னை–**600 009/18.**
உள்ளுறை தணிக்கை அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலர் அலுவலகம்,
சென்னை–**600 009.**

**<u>நகல்:</u>**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– **600 009.**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – **600 009.**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( அந.**2**) துறை, சென்னை– **600 009.**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.